29 / 2010

சுருக்கம்

பணியமைப்பு – தமிழ்நாடு நகராட்சி மருத்துவப் பணி, தமிழ்நாடு மாநகராட்சி பொது சுகாதாரப் பணி – தமிழ்நாடு அரசு மருத்துவ அலுவலர்களுக்கு இணையாக, தமிழ்நாடு நகராட்சி மற்றும் மாநகராட்சி மருத்துவ அலுவலர்களுக்கு (அலோபதி) பதவி உயர்வுடன் கூடிய ஊதிய உயர்வு (Time bound promotion with pay hike) வழங்கி – ஆணை வெளியிடப்படுகிறது.

---

நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (நப.3)துறை

அரசாணை(ப)எண்.583 நாள்: 26.11.2010

படிக்கப்பட்டது:-

1. அரசாணை(நிலை)எண்.354, சுகாதாரம் மற்றும் குடும்பநலத்துறை, நாள் 23.10.2009.
2. இயக்குநர், பொதுசுகாதாரம் மற்றும் நோய் தடுப்பு மருந்து துறை கடிதம் ந.க.எண்.023303/PHC5/A2/2010, நாள் 03.03.2010.
3. நகராட்சி நிர்வாக இயக்குநரின் ந.க.எண்.8669/2009/எச்3, நாள் 01.05.2010.

*****

ஆணை:-

மேலே மூன்றாவதாகப் படிக்கப்பட்ட கடிதத்தில், தமிழ்நாடு நகராட்சி மருத்துவர்கள் சங்கத்தின் கோரிக்கையினை பரிசீலனை செய்ய தோற்றுவிக்கப்பட்ட குழுவின் பரிந்துரையின் அடிப்படையில், மேலே முதலாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையில், தமிழ்நாடு அரசு மருத்துவர்களுக்கு பதவி உயர்வுடன் கூடிய ஊதிய உயர்வு (person oriented promotion) வழங்க உத்தரவிடப்பட்டுள்ளது என்றும், தமிழ்நாடு அரசு பொது சுகாதாரம் மற்றும் நோய்தடுப்பு மருந்துத் துறை, தமிழ்நாடு அரசு மருத்துவம் மற்றும் ஊரக நலப்பணிகள் துறை ஆகியவற்றின் கீழ் தமிழ்நாடு முழுவதும் செயல்படுத்தும் திட்டங்களான 1) வருமுன் காப்போம், 2) வாழ்வொளித் திட்டம், 3) எய்ட்ஸ் ஒழிப்பு மற்றும் கட்டுப்பாடு திட்டம், 4) காசநோய் ஒழிப்பு மற்றும் சிகிச்சை அளிக்கும் திட்டம், 5) தொழுநோய் ஒழிப்பு மற்றும் சிகிச்சை அளிக்கும் திட்டம், 6) யானைக்கால் நோய் ஒழிப்புத் திட்டம், 7) மலேரியா நோய் ஒழிப்புத் திட்டம், 8) போலியோ நோய் ஒழிப்புத் திட்டம், 9) பள்ளி மருத்துவ திட்டங்கள் அனைத்தும் நகராட்சிகள் மற்றும் மாநகரட்சிகளில் மருத்துவ அலுவலர்கள் செயல்படுத்தி வருவதால் மேற்காண் அரசாணைக்கேற்ப தமிழ்நாடு அரசு மருத்துவர்களுக்கு இணையாக பதவி உயர்வுடன் கூடிய ஊதிய உயர்வு (Time Bound

Promotion with pay hike) வழங்கும்படி தமிழ்நாடு நகராட்சி மருத்துவ அலுவலர் சங்கம் கோரியுள்ளது என நகராட்சி நிர்வாக இயக்குநர் தெரிவித்துள்ளார்.

2. மேலும், தமிழ்நாடு நகராட்சி மருத்துவ அலுவலர்கள் சங்கத்தின் மேற்படி கோரிக்கை மனு குறித்து பொது சுகாதாரம் மற்றும் நோய்தடுப்பு மருந்துத் துறை இயக்குநர் அவர்களின் குறிப்பு நகராட்சி நிர்வாக இயக்குநரக கடிதத்தில் கோரப்பட்டது என்றும், இது குறித்து தமிழ்நாடு மாநகராட்சி / நகராட்சிகளில் பணிபுரியும் மருத்துவ அலுவலர்களின் பதவி உயர்வு குறித்து பொது சுகாதாரம் மற்றும் நோய்தடுப்பு மருந்துத் துறை இயக்குநர் அவர்கள் தனது கடிதத்தில் பின்வருமாறு கருத்து தெரிவித்துள்ளதாக நகராட்சி நிர்வாக இயக்குநர் தெரிவித்துள்ளார்:—

(i) தமிழ்நாடு மருத்துவப்பணி (TNMS) மற்றும் தமிழ்நாடு மாநகராட்சி / நகராட்சி மருத்துவப்பணி மற்றும் இதர உள்ளாட்சி அமைப்புகளில் மருத்துவப்பணியில் பணிபுரியும் மருத்துவ அலுவலர்கள் MBBS அடிப்படைத் தகுதியாகக் கொண்டு பணியில் நியமனம் செய்யப்படுகிறார்கள்.

(ii) தமிழ்நாடு அரசு மருத்துவப்பணி மற்றும் உள்ளாட்சி அமைப்புகளில் (Urban Local Bodies) பணிபுரியும் அலுவலர்களுக்கான தற்போதைய அடிப்படை சம்பள விகிதம் PB3 15600-39100+Grade Pay 5400 (8000-275-13500 முந்தைய அடிப்படை சம்பள விகிதம்).

(iii) அனைத்து மாநகராட்சிகள் / நகராட்சிகளில் உள்ளாட்சி அமைப்புகளில் பணிபுரியும் மருத்துவ அலுவலர்களின் பணிப் பொறுப்பு (Job responsibility) மற்றும் பணியின் நேரமும் ஆரம்ப சுகாதார மையத்தில் (Primary Health Centres)—ல் பணிபுரியும் மருத்துவ அலுவலர்களின் பணியினை ஒத்ததாக உள்ளது.

(iv) அரசாணை எண்.354, குடும்பநலத் துறை, நாள் 23.10.2009—ல் தமிழ்நாடு மருத்துவப்பணியில் பணிபுரியும் மருத்துவர்களுக்கு 5 படிகளில் பதவி உயர்வு பின்வருமாறு வழங்கிட உத்தரவிடப்பட்டுள்ளது.

| | Level | Pay Scale | Years of Service |
|---|---|---|---|
| 1 | Civil Assistant Surgeon (Entry Level) | PB3-15600-39100+GP 5400 | --- |
| 2 | Senior Assistant Surgeon | PB3-15600-39100+GP 5700 | 8 |
| 3 | Civil Surgeon | PB3-15600-39100+GP 6600 | 15 |
| 4 | Senior Civil Surgeon | PB3-15600-39100+GP 7600 | Years not specified |
| 5 | Chief Civil Surgeon | PB4-37400-67000+GP 8700 | 20 |

3. நகராட்சி நிர்வாக இயக்குநர் மேலும் கூறுகையில், தமிழ்நாடு நகராட்சி / மாநகராட்சிகளில் பணிபுரியும் மருத்துவ அலுவலர்களின் பணியின் தன்மை, கடமை, கல்வித் தகுதி மற்றும் ஊதிய விகிதம் பொது சுகாதாரம் (ம) நோய்த்தடுப்பு மருந்து துறையில் ஆரம்ப சுகாதார மையத்தில் (Primary Health Centre) பணிபுரியும் மருத்துவர்களுக்கு இணையாக உள்ளதால், மேலே முதலாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையில் அளிக்கப்பட்டுள்ள பதவி உயர்வு மற்றும் ஊதிய உயர்வு (Time Bound Promotion with pay hike) போன்றவைகள் தமிழ்நாடு மாநகராட்சி / நகராட்சி மருத்துவர்களுக்கும் அளிப்பதற்கு பரிசீலிக்கலாம் (may be considered) என்றும், பணியாற்றிய காலத்தின் அடிப்படையில் பின்வருமாறு பதவி உயர்வு வழங்கலாம் என்று பொது சுகாதாரம் மற்றும் நோய் தடுப்பு மருந்துத் துறை இயக்குநர் அவர்கள் கருத்து தெரிவித்துள்ளார் என்றும் தெரிவித்துள்ளார்:–

| | Level | Pay Scale | Years of Service |
|---|---|---|---|
| 1 | Medical Officer Grade II | PB3-15600-39100+GP 5400 | --- |
| 2 | Medical Officer Grade I | PB3-15600-39100+GP 5700 | 8 |
| 3 | Senior Medical Officer Grade II | PB3-15600-39100+GP 6600 | 15 |
| 4 | Senior Medical Officer Grade I | PB3-15600-39100+GP 7600 | Years not specified |
| 5 | Chief Medical Officer | PB4-37400-67000+GP 8700 | 20 |

4. மேலும், தமிழ்நாடு நகராட்சி பொதுப்பணி விதி 1970, தமிழ்நாடு நகராட்சி பொறியியல் பணி விதி 1970, தமிழ்நாடு நகராட்சி நகரமைப்பு பணி விதி 1970 மற்றும் தமிழ்நாடு நகராட்சி பொது சுகாதார பணி விதி 1977 ஆகிய பணிவிதிகளில் குறிப்பிடப்பட்ட பணியிடங்களுக்கு பதவி உயர்வுக்கு வாய்ப்புண்டு என்றும், ஆனால், தமிழ்நாடு நகராட்சி மருத்துவப் பணி விதிகள் 1970–ல் மருத்துவ அலுவலர்களுக்கு பதவி உயர்வுக்கு வாய்ப்பில்லை என்றும் நகராட்சி நிர்வாக இயக்குநர் தெரிவித்துள்ளார்.

5. மேற்கூறிய நிலையில், நகராட்சி நிர்வாக இயக்குநரின் பரிந்துரையினை ஏற்று, தமிழ்நாடு அரசு மருத்துவத் துறையின் கீழ் பணியாற்றும் மருத்துவர்களுக்கு, பதவி உயர்வுடன் கூடிய ஊதிய உயர்வு (time bound promotion with pay hike) வழங்கி மேலே முதலாவதாகப் பிறப்பிக்கப்பட்ட ஆணையினை கீழ்க்கண்டவாறு நகராட்சி /

மாநகராட்சிகளில் பணியாற்றும் மருத்துவ அலுவலர்களுக்கும் நீட்டித்து அரசு அவ்வாறே ஆணையிடுகிறது.

| | Level | Pay Scale | Years of Service |
|---|---|---|---|
| 1 | Medical Officer Grade II | PB3-15600-39100+GP 5400 | --- |
| 2 | Medical Officer Grade I | PB3-15600-39100+GP 5700 | 8 |
| 3 | Senior Medical Officer Grade II | PB3-15600-39100+GP 6600 | 15 |
| 4 | Senior Medical Officer Grade I | PB3-15600-39100+GP 7600 | Years not specified |
| 5 | Chief Medical Officer | PB4-37400-67000+GP 8700 | 20 |

6. இவ்வாணை, நிதித்துறையின், 29.10.2010 நாளிட்ட அ.சா.எண்.43187/நிதி(ஊபி)த்துறை/2010–ல் பெறப்பட்ட இசைவுடன் வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

க.அஷோக் வர்தன் ஷெட்டி,
அரசு முதன்மைச் செயலாளர்.

பெறுநர்

நகராட்சி நிர்வாக இயக்குநர், சேப்பாக்கம், சென்னை – 600 005.
இயக்குநர், பொதுசுகாதாரம் மற்றும் நோய் தடுப்பு மருந்து துறை, சென்னை – 600 006.
அனைத்து நகராட்சி ஆணையர்கள்/ மாநகராட்சி ஆணையர்கள்
(நகராட்சி நிர்வாக இயக்குநர் வழிமுறையாக)

நகல்:–

நிதி (ஊபி)த்துறை, சென்னை – 600 009.
குடும்ப நல்வாழ்வு மற்றும் சுகாதாரத்துறை, சென்னை – 600 009.
மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்களின் சிறப்பு நேர்முக உதவியாளர், சென்னை– 600 009.
முதன்மைச் செயலர் அவர்களின் தனிச் செயலாளர், நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, சென்னை– 600 009.
நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (மாந.3 )துறை, சென்னை– 600 009 .
நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (அந.2) துறை, சென்னை– 600 009.

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

26.11.2010
பிரிவு அலுவலர்.